

# நாங்கள் பராமரிப்பு அளிக்கும் மற்றும் எங்களிடம் பராமரிப்பை பெற்றுச் செல்லும் குழந்தைகளுக்கான எங்களின் உறுதிமொழி

இந்த உறுதிமொழியில் பல வாக்குறுதிகள் உள்ளன. இதில் பராமரிப்பில் உள்ள குழந்தைகள் அல்லது எங்களிடம் பராமரிப்பை பெற்றுச் சென்ற குழந்தைகள் எங்களிடமிருந்து பெற விரும்பும் உதவிகள் இதில் அடங்கும்.
எங்களால் முடிந்த சிறப்பான உதவியையும் ஆதரவையும் உங்களுக்கு அளிப்போம் என்று நாங்கள் வாக்குறுதி அளிக்கிறோம்.

இதனை செய்ய நாங்கள்:

- உங்களிடம் வெளிப்படையாகவும் நேர்மையாகவும் இருப்போம்
- உங்களை நம்புவோம், உங்களால் முடிந்தவரை சிறப்பாக இருக்க உங்களை ஊக்குவிப்போம்
- உங்கள் எண்ணத்தைப் புரிந்துக் கொள்ள நீங்கள் பேசுவதை கவனிப்போம், மரியாதை அளிப்போம் மற்றும் உங்களுடன் சேர்ந்து செயல்படுவோம்
- கிடைக்கக்கூடிய ஆதரவு மற்றும் உங்கள் உரிமைகள் குறித்து உங்கள் பயணத்தின் ஒவ்வொரு தருணத்திலும் உங்களுக்குத் தகவலளிப்போம்.
- உங்களுக்கு தகவல்கள், ஆலோசனை, நடைமுறை உதவி மற்றும் நிதி உதவியை அளித்து உதவி செய்வோம், உணர்வுசார் ஆதரவை அளிப்போம். மேலும், நீங்கள் விரும்பினால் தொடர்புக் கொள்ளத்தக்க ஒரு நபரை உங்களுக்கு அறிமுகம் செய்வோம்
- உங்களுக்குப் பொருத்தமான வீட்டை உங்களுக்கு கண்டுபிடித்து தருவோம்
- உங்களை ஒரு தனிநபராக இருக்க ஊக்குவித்து, உங்கள் அடையாளத்திற்கு மரியாதையும் மதிப்பும் அளிப்போம். ஆனால், உங்களிடம் வேறுபாடு காட்ட மாட்டோம்
- உங்களுக்கு நாங்கள் உதவி செய்வோம், எப்போதும் உங்களை சந்தேகப்பட மாட்டோம்
- ஒவ்வொருடன் தனித்தனியாகப் பேச வாய்ப்பளிப்போம்
- உங்களுக்கு ஆதரவளிப்போம், வாழ்க்கைத் திறன்களை உருவாக்கவும் வாழ்நாள் சாம்பியனாக இருக்கவும் உங்களுக்கு உதவுவோம்
- உங்கள் புகார்களைக் கேட்டு, அதனைத் தீர்ப்போம்
- உங்கள் கருத்தை வெளியிட உதவுவோம்
- நேர்மறையான செயல்பாடுகளில் ஈடுபட வாய்ப்பளிப்போம்
- பராமரிக்கப்படும் மற்ற குழந்தைகளையும் இளைஞர்களையும் அல்லது பராமரிப்பு பெற்று புறப்படுபவர்களையும் சந்திக்க உங்களுக்கு உதவுவோம்
- சுதந்திரமாக வாழவும், உங்கள் எதிர்காலத்திற்குத் திட்டமிடவும் உங்களுக்கு உதவுவோம்
- சரியான பராமரிப்பு வழங்குநருடன் தொடர்ந்து இருக்க உங்களுக்கு உதவுவோம்
- குடும்ப தொடர்பு பற்றிய உங்கள் கருத்துக்களைக் கேட்போம், சாத்தியமானால் இதற்கு உதவுவோம்
- சிறிது நாட்கள் பராமரிப்பில் இருந்த அல்லது பராமரிப்பிற்குப் புதிதாய் வருபவர்களுக்கு வழிகாட்டியாவதற்கு பராமரிப்பை விட்டுச் சென்ற குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு உதவுவோம்.